# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2040/45 - 2017 ඔක්තෝබර් මස 13 වැනි සිකුරාදා - 2017.10.13

*2040/45 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

***1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

*7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

குறிப்பு இல.: IMDS/LND/05/ACQ/7500.

*ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.*

***எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்***: *கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் மெந்தலாவத்த எனும் காணி எடுத்துக்கொள்ளல்.*

*சப்ரகமுவ மாகாணத்தில், இரத்தினபுரி மாவட்டத்தில், இம்புல்பே பிரதேச செயலாளர் பிரிவில், கடவத கோரளை கரதியமுல்ல கிராம அலுவலர் பிரிவில், கரதியமுல்ல கிராமத்தில் அ. க. பி 380 பிற்சேர்க்கை இல. 05 இன் காணித்துண்டின் இல. 112 இற்கு தொடர்பான காணியின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது:*

***துண்டு இல. 112***

*காணியின் பெயர்: மென்தலாவத்த; உரிமை கோருவோர் : எஸ். கனகசிங்க, மனிபே தெற்கு, மனிபே; விஸ்தீரணம்: 6.0738 ஹெக்டயார்.*

*மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2017 ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு இம்புல்பே பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.*

*ஜே. எல். சீ. கே. ஜயசிங்க,*
*பிரதேச செயலாளர்,*
*இம்புல்பே.*

*பிரதேச செயலகம்,*
*இம்புல்பே,*
*2017, ஒற்றோபர் 11.*

*10 - 1635*